முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள்.09.03.2026

O.S No. 340/2012

வா.சா.2-ரோகித் வில்சன்

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் தாக்கல் செய்த நிருபண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்தேன். அதனை என் வழக்கறிஞர் தயார்செய்தார் என்றால் சரி. இந்த வழக்கை முதலில் தாக்கல் செய்தது என் அம்மா என்றால் சரி. என் அம்மா முதலாவது சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். என் அம்மாவின் சாட்சியத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன் முழு சாட்சியமும் வரிவிடாமல் தெரியாது. வழக்கின் முழு விவரமும் எனக்கு தெரியும், இந்த வழக்கில் என் அம்மா 5 சொத்துக்களை சேர்த்திருந்தார்கள். கூடுதலாக தற்போது 2 சொத்துக்கள் சேர்க்கபட்டுள்ளது. அது எனக்கு உறுதியாக தெரியும். கூடுதலாக சேர்க்கபட்டுள்ள 2 சொத்துக்களின் பரப்பளவு 103 சென்ட் ஆகும். 103 சென்ட்டின் நான்கு பக்க எல்லை என்ன என்றால் கிழக்கு பக்கம் கோயில் உள்ளது. மேற்கு பக்கம் 4 முதல் 5 அடி ரோடு உள்ளது. வடக்கு பக்கம் பெயர்தெரியாத நபர் ஒருவரின் சொத்து. தெற்கு பக்கம் பல சொத்துக்கள் உள்ளது அதில் ஒரு சொத்து என் தாய்மாமனின் சொத்தாகும். மற்ற சொத்துக்களின் விவரம் எனக்கு தெரியாது.

103 சென்ட் சொத்தை நான் நேரில் சென்று பார்த்துள்ளேனா என்றால் வழக்கிற்கு பின்பு நான் சென்று பார்த்ததில்லை. 103 சென்ட் சொத்தை தவிர கூடுதலாக வேறு சொத்துக்கள் சேர்க்கவில்லை என்றால் சரி. என் நிருபண வாக்குமூலத்தில் 2வது பக்கத்தில்1 முதல் 5 வழக்கு சொத்துக்கள் என் தாயாரின் அப்பாவிற்கும் அவரது மனைவிக்கும் உரிமை பட்டதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரி. குறிப்பிட்டு மேற்படி 5 சொத்துக்களில் எது தாத்தாவுடையது எது பாட்டியுடையது என்றால் எனக்கு தெரியாது. நிருபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் என் தாயார் சொல்லிய விவரங்கள் ஆகும். சொத்துக்கள் விஸ்தீரணம் மற்றும் விவரங்கள் எனக்கு தெரியும். அது யாருக்கு பாத்தியபட்டு யார் கை மூலமாக வந்தது என்று எனக்கு தெரியாது.

1வது ஐட்ட சொத்து சர்வே எண் எனக்கு தெரியாது. அது புத்தளத்திற்கும் தெங்கம்புதூருக்கும் இடையே உள்ள சொத்தாகும். அதன் பரப்பளவு எனக்கு தெரியாது. 29 சென்ட்

என நினைக்கிறேன். தற்போது சார்லஸ் கிறிஸ்டின் விக்டர் கைவசம் உள்ளது. அந்த சொத்தில் 2004 ம் வருடத்தில் 20 லட்சம் செலவு செய்து வீடு கட்டியுள்ளார் என்றால் வீடு கட்டியுள்ளார் செலவு செய்த விவரம் எனக்கு தெரியாது. அந்த வீட்டின் கிரகபிரவேசத்திற்கு நான் சொல்லவில்லை என் அம்மா சென்றாரா என தெரியாது. 1 வது ஐட்ட சொத்திற்கு நான் இதுவரை சென்றதே இல்லை. என் அம்மாவின் திருமணத்தின் போது எவ்வளவு நகை ரொக்கம் அவர்களுக்கு கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது.

என் அம்மா அவரது சாட்சியத்தின் போது அசையும் மற்றும் அசையா சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என சொல்லியுள்ளார்கள் என்றால் அசையா சொத்துக்களை சொல்லியுள்ளார் அசையும் சொத்துக்கள் குறித்து எனக்கு தெரியாது. என் அம்மா அவரது சாட்சியத்தின் போது அசையும் மற்றும் அசையா சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என சொல்லியுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் அதனை மறைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.என் முதல் விசாரணையின் 2 வது பக்கத்தில் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை சேர்க்க 1 ம் பிரதி நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என் அம்மா தாக்கல் செய்த வழக்கில் பாகம் பிரிக்காத அசையும் மற்றும் அசையா சொத்துக்களை சேர்க்க வேண்டியது என் அம்மாவின் கடமை என்றால் சாட்சி பதில் சொல்லவில்லை. பாறசாலையில் போலியான சொத்துக்களை காட்டி இஷ்டதானம் எழுதி கொடுத்ததாக சொல்லி அந்த சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்க மனு தாக்கல் செய்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். போலியான சொத்து எது என்றால் என் தாத்தாவிற்கு சொந்தமில்லாத பாறசாலையில் உள்ள சொத்தை காட்டி 103 சென்ட்டை ஆவணம் எழுதி உள்ளார்கள். அந்த ஆவணமானது என் அம்மா இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு முன்பாகவே எழுதப்பட்ட ஆவணம் என்றால் எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தின் எண் என்ன என்றால் தெரியாது.1983 ல் எழுதப்பட்ட ஆவணமா என்றால் தெரியாது.

1983 ல் எழுதப்பட்ட ஆவணம் என் அம்மாவிற்கு தெரியும் என்றாலும் பாறசாலையில் உள்ள

சொத்தையும் அந்த ஆவணத்தில் எழுதி கொடுத்த சங்கதிகளையும் ஒப்பு கொண்டு என் அம்மா ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இறுதி நிலை தீர்ப்பாணை என்ன என்று எனக்கு தெரியாது. எனது நிருபண வாக்குமூலத்தில் இறுதிநிலை தீர்ப்பாணை குறித்த சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியாது சங்கதிகள். என் தாத்தா பாட்டியின் முழுமையான அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் இந்த வழக்கில் சேர்க்கப்படாததால் இந்த வழக்கானது பகுதி பாகபிரிவினை தோஷத்தால் பாதிக்கப்ட்டு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கதக்கதல்ல என்றாலும் இந்த வழக்கானது பிரதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல. என் தாத்தா பாட்டியின் சொத்தின் முழு விவரங்கள் தெரியாமல் நான் சொல்லும் சாட்சியம் நிராகரிக்கதக்கது என்றால் சரியல்ல.

(2 ம் பிரதி 1 ம் பிரதியின் குறுக்கு விசாரணையை ஏற்புடை செய்வதாக எடுத்துரைத்ததை பதிவு செய்யபடுகிறது)